3rd November 1965]

* 248 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா——

(அ) ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, பிச்சிவாக்கம் கிராமத்தில் உள்ள விதைப் பண்ணைக்குரிய நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(இ) அங்கு உற்பத்தி செய்யப்படும் விதைகள் யாவை ? அப் பண்ணைக்காக இன்னும் அதிகமாக நிலங்கள் வாங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

(உ) இதுவரையிலும் அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 100 ஏக்கர் புறம்போக்கு நிலம்.

(இ) 1964-65-ம் ஆண்டில் இந்தப் பண்ணையில் கீழ்க் கண்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன:

(i) (1) நிலக்கடலை T.M.V. 2.
(2) கொள்ளு CO I.
(3) வரகு CO I.

(ii) இப்பண்ணையின் பரப்பளவைத் தற்போது விரிவாக்கும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

(உ) 21—8—1963 முதல் 21—3—1964 வரை ரூ. 10,112.14.
1—4—1964 முதல் 31—3—1965 வரை ரூ. 49,056.83.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்தப் பண்ணையில் கடலைக்காய் விதை எவ்வளவு உற்பத்தியாகிறது? அது லாபத்தில் வேலை செய்கிறதா அல்லது நஷ்டத்தில் வேலை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது தான் 'ட்யூப் வெல்ல்' போடப்பட்டிருக்கின்றன. தற்சமயம் அதிக லாபம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உருளைக்கிழங்கு பயிர் செய்தல்

■ 249 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) 1965--66-ம் ஆண்டில் நமது மாநில சர்க்காரால் ஸ்காட் லண்டிலிருந்து உருளைக்கிழங்கு விதை இறக்குமதி செய்யப் பட்டதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

(உ) அவைகள் எங்கெங்கு யார் யாருக்கு வினியோகிக்கப் பட்டன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1965 பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் ஸ்காட்லந்திலிருந்து "கிரேட் ஸ்காட்" என்கிற உருளைக்கிழங்கு வகை விதைகள் இறக்குமதி செய்யப்பட்டன.